## சுற்றறிக்கை

பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் மற்றும் சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதத்தின் படி, 2024–2025ஆம் கல்வியாண்டில் அரசு/அரசு உதவி பெறும்/மெட்ரிக்/சுயநிதி பள்ளிகளில் பயிலும் U 14/U 17/U 19 வயதுப் பிரிவில் உள்ள மாணவ/மாணவியர்களுக்கு மாநில அளவிலான பாரதியார் தின/குடியரசு தின புதிய விளையாட்டுப் போட்டியான டேக்வாண்டோ சிவகங்கை மாவட்டத்தில் கீழ்காணும் அட்டவணையின் படி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| போட்டி | போட்டி நடைபெறும் தேதி | போட்டி நடைபெறும் இடம் |
|---|---|---|
| டேக்வாண்டோ | 28–01–2025 முதல் 29–01–2025 வரை மாணவியர்களுக்கு<br>30–01–2025 முதல் 31–01–2025 வரை மாணவர்களுக்கு | அரசனூர் பாண்டியன் சரஸ்வதி பொறியியல் கல்லூரி, சிவகங்கை மாவட்டம். |

போட்டியில் பங்கு கொள்ள வரும் மாணவ/மாணவியர்கள் தங்குவதற்கான இடம் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய நபர்களின் கைப்பேசி எண் போன்ற விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே இணைப்பில் உள்ள மாணவ/மாணவியர்களை போட்டியில் பாதுகாப்பாக, எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல், உரிய நேரத்தில் பங்கு பெறச் செய்ய உடற்கல்வி ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி தாளாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. போட்டியில் பங்கு பெறும் மாணவ/மாணவியரின் பட்டியல்
2. தங்கும் இடம் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய நபர்களின் விவரம், அணிமேலாளர்களுக்கான வழிகாட்டுநெறிமுறைகள்

/ஒப்பம்/
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்
அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்/
தனியார் பள்ளி தாளாளர்கள், வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல்
1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை/தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம்.
தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு
தெரிவிக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர் மாவட்டம்.
தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.
3. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர், சென்னை.
தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.